©
தமிழ்நாடு அரசு
2009

கையெழுத்துத் தொடர்

# நிதி (படிகள்)த் துறை

## அரசு ஆணை எண்.471, நாள் 22.09.2009.

*(புரட்டாசி 6, திருவள்ளுவர் ஆண்டு 2040)*

தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்கள் – தனி உயர்வு – 1.7.2009 முதற் கொண்டு தனி உயர்வு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**பின்வருவனவற்றைப் படிக்கவும்:–**

1. அரசாணை நிலை எண்.234, நிதி (ஊதியக் குழு)த் துறை, நாள் 01.06.2009.
2. அரசாணை நிலை எண்.470, நிதி (படிகள்)த் துறை, நாள் 22.09.2009.

*****

**ஆணை:**

மேலே பார்வை 1–ல் படிக்கப்பட்டுள்ள ஆணையில் அலுவலர் குழு பரிந்துரைகளின்படி, பத்தி 20 (iv)–ல், 01.07.2006 முதல் ரூ.600/– வரை திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்கள் தனிப்பட்ட தொகையாக மாதம் ரூ.20/–ம், ரூ.600/–க்கு மேலாக திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்கள் தனிப்பட்ட தொகையாக மாதம் ரூ.40/–ம் பெற ஆணை பிறப்பித்தது.

2. மேலே பார்வை 2–ல் கண்டுள்ள அரசாணையில், முறையான திருத்த காலமுறை ஊதிய விகிதம் பெறும் அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படியை 1.7.2009–லிருந்து உயர்த்தி அரசு ஆணைகள் பிறப்பித்தது. எனவே, திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறுபவர்களுக்கு 1.7.2009–லிருந்து இத்தனிப்பட்ட தொகையை உயர்த்தி வழங்குவதென அரசு தீர்மானித்தது. இதன்படி, திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கு 1.7.2009 ஆம் நாளிலிருந்து தனிப்பட்ட தொகையை உயர்த்தி வழங்கி கீழ்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

| | |
|---|---|
| 1.1.2006 ஆம் நாளிலிருந்து திங்களொன்றுக்கு ரூ.600/– வரை திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறுபவர்களுக்கு | திங்களொன்றுக்கு ரூ.20/– |
| 1.1.2006 ஆம் நாளிலிருந்து திங்களொன்றுக்கு ரூ.600/–க்கு மேலாக திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறுபவர்களுக்கு | திங்களொன்றுக்கு ரூ.40/– |

3. ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2009 ஆம் மாதங்களுக்கான தனிப்பட்ட நிலுவைத் தொகை செப்டம்பர் 2009 ஆம் மாத திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெற்ற பின்னரே வழங்கப்பட வேண்டும்.

4. உள்ளாட்சி மன்றங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கீழ் பணியாற்றும் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஆகியோர்களுக்கும் இந்த ஆணை பொருந்தும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கு. ஞானதேசிகன்**
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
அனைத்து துறைத் தலைவர்கள்.
மாநில தகவல் ஆணையம், 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை—18.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
சமூக நலத்துறை இயக்குநர், சென்னை—5.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை—6.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை—18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை—18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை—I), சென்னை—18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை—I), சென்னை—18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை—II), சென்னை—18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை—II), சென்னை—18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை—9 / மதுரை.
கருவூலக் கணக்குகள் ஆணையாளர், சென்னை—15.
அனைத்து கருவூல அதிகாரிகள்.
ஆணையாளர், மாநகராட்சி, சென்னை/மதுரை/கோயம்புத்தூர்/திருச்சிராப்பள்ளி/சேலம்/திருநெல்வேலி/ஈரோடு/திருப்பூர்.
உள்ளாட்சி நிதிக் கணக்கு இயக்குநர், சென்னை—2.

<u>நகல் பெறுநர்</u>
சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை, சென்னை—9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை—9.
ஊரக வளர்ச்சித் மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை—9.
நிதித்துறையிலுள்ள பிரிவுகள் அனைத்தும், சென்னை—9.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்கள்.

// ஆணைப்படி : அனுப்பப்படுகிறது//

22/09/2009

பிரிவு அலுவலர்